## விடுதலைப் புலிகளால் ....

*(11ம் பக்கத் தொடர்ச்சி)*

திருகோணமலை மீதும், மட்டக்களப்பு மீதும் ஒரு மீட்புத் தாக்குதலை நடாத்தியபடி, யாழ் குடா மீது ஒரு பாரிய முற்றுகைத் தாக்குதலை நடாத்தும் அளவிற்கு அந்த நேரத்தில் விடுதலைப் புலிகள் வசம் பெரும் எண்ணிக் கையிலான போராளிகள் இருந்திருக்கின் றார்கள் என்ற யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ளவேண்டும். அல்லைப்பிட்டி, மண்டை தீவு வழியாகவும், முகமாலை வழியாகவும் புலிகளின் அணிகள் நகர்ந்து பலாலிவரை செல்லும் வரைக்கும், பலாலித் தளம் மீதும், திருகோணமலைத் துறைமுகம் மீதும் தொடர்ச்சியாக எறிகணைத் தாக்குதல்களை நடாத்திக்கொண்டே இருக்கும் அளவிற்கு, விடுதலைப் புலிகள் வசம் எறிகணைகள் கையிருப்பில் இருந்திருக்கின்றன என்கின்ற உண்மையையும் நாம் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

இவை அனைத்தையும்விட, ஆயிரக் கணக்கான சிறிலங்காப் படையினர் நிலை கொண்டுள்ள பிரதேசங்களை ஆக்கிரமித்து வெற்றி கொண்டு விடலாம் என்ற தற்துணிவு விடுதலைப் புலிகளின் தலைமைக்கும், அதன் தளபதிகளுக்கும், போராளிகளுக்கும் அந்த நேரத்தில் இருந்திருக்கின்றது என்கின்ற உண்மையை நாம் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

சரி, இப்பொழுது நான் எழுப்புகின்ற கேள்விகள் இவைதான்?

சுமார் ஒரு வருட காலத்திற்கு முன்னர் விடு தலைப் புலிகளிடம் இருந்த அந்த தற்துணி விற்கான காரணம் இப்பொழுது இல்லாமல் போயிருக்கின்றதா?.

யாழ் குடா மீது போர் தொடுக்கும் அளவிற்கு அப்பொழுது விடுதலைப் புலிகள் வசம் இருந்த வளங்களில் ஏதாவது தற்பொழுது குறைவடைந்துள்ளதா?

அந்த நேரத்தில் யாழ் குடா மீது தாக்குதலை நடாத்தவதற்கு களம் இறங்கியிருந்த புலி களின் முக்கிய கட்டளைத் தளபதிகளில் யாரை யாவது விடுதலைப் புலிகள் அமைப்பு இழந் திருக்கின்றதா? பாலாலி மீது எறிகணைகள் வீசக்கூடிய தூரத்தில் இருந்து புலிகள் பின்வாங்கி இருக்கின்றார்களா?

அந்த நேரத்தில் வட கடலை ஆக்கிரமித் திருந்த கடற்புலிகளின் பலம் இழக்கப்பட்டி ருக்கின்றதா? பலாலி மீது குண்டு வீசிய வான் புலிகளின் விமானங்கள் ஏதாவது அழிக்கப் பட்டிருக்கின்றதா? நிச்சயமாக இல்லை.

போராளிகளின் தொகை என்று பார்த் தால், அதில் வீழ்ச்சி ஏற்பட்டதற்கான சந்தர்ப் பங்கள் இல்லை என்றுதான் கூறவேண்டும். யாழ் குடா மீதான புலிகளின் அந்த சமரைத் தொடர்ந்து கிழக்கில் மாவில்ஆறு, வாகரை, குடும்பிமலை, கஞ்சிகுடிச்சாறு சண்டைகள் மற்றும் வடக்கில் முகமாலை, மன்னார், மடு தொடர் மோதல்கள் என்று இந்தக் காலப் பகுதியில் பல சண்டைகள் நடைபெற்றிருந்தும், விடுதலைப் புலிகள் தரப்பின் போராளிகளது இழப்பு என்பது சுமார் ஆயிரம் என்ற அளவில் தான் இருக்கின்றது. (கடந்த மாதம் 27ம் திகதி மாவீரர் தினத்தை ஒட்டி விடுதலைப் புலிகளின் மாவீரர் பணிமனை வெளியிட்ட விபரக்கொத்தைப் பார்க்கும்போது இதனை அறிந்துகொள்ள முடிகின்றது.)

ஆனால் இதே காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் சுமார் 25,000 போராளிகளைப் புதிதாகத் தமது அமைப்பில் இணைத்துக் கொண்டுள்ளதாக, தகவல்கள் தெரிவிக் கின்றன.

'வன்னியில் வீட்டுக்கொரு பிள்ளை நாட்டைக் காக்கத் தரவேண்டும்' என்ற புலிகளின் கோரிக்கையின் அடிப்படையில், ஏராளமான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை புலிகள் அமைப்பில் தாமாகவே முன்வந்து இணைத்தி ருக்கின்றார்கள். சில காலத்திற்கு முன்னர் வன்னிக்குச் சென்று வந்த சர்வதேச ஊடக அமைப்பான 'ரொயிட்டர்ஸ்' செய்தி நிறுவனம், வன்னியில் புலிகளால் கட்டியெழுப்பப் பட்டு வருகின்ற பலம் பற்றி பல செய்திகளை ஆதாரத்துடன் வெளியிட்டிருந்தது யாவரும் அறிந்ததே.

இதனை விட, 2006 ஓகஸ்டில் மூதூர் மீது தாக்குதல் நடாத்தி வெற்றிகொண்ட போராளிகள் அனைவருமே தற்பொழுது வன்னியில்தான் நிலை கொண்டிருக்கின் றார்கள். மூதூர் தாக்குதல் காலகட்டத்தில், சமாந்திரமாக மட்டக்களப்பிலும் தாக்கு தலை நடாத்தும் நோக்கில் அங்கு நிலை கொண்டிருந்த தளபதி ஜெயம், தளபதி பானு, தளபதி ரமேஷ், தளபதி கீர்த்தி உட்பட அவர்களது படை அணிகளும் தற்பொழுது வன்னியில்தான் நிலை கொண்டுள்ளன.

எனவே யாழ் குடா மீது ஒரு தாக்குதலை நடாத்தி வெற்றிகொண்டு விடலாம் என்ற தற் துணிவை விடுதலைப் புலிகளுக்கு ஏற்படுத்திய காலகட்டத்தை விட, இன்றைய நிலையில் பல மடங்கு அதிகமான போராளிகளுடன் விடுதலைப் புலிகளின் அணிகள் வன்னியில் நிலைகொண்டு இருக்கின்றது என்பதுதான் உண்மை.

### தற்காப்புச் சமர்

இந்த இடத்தில் உங்களிடம் மற்றொரு கேள்வி எழலாம்.

வன்னியின் பல முனைகளில் சிறி லங்காப் படையினர் களங்களைத் திறந் துள்ளார்கள். அங்கெல்லாம் புலிகள் தற் காப்புச் சமர்களை நடாத்தியாகவேண்டி நிர்பந் திக்கப்பட்டிருக்கின்றார்கள். அப்படி இருக்க, புலிகளால் எப்படி ஒரு தாக்குதல் சமரை யாழ் குடா மீது மேற்கொள்ள முடியும் என்று சரத் பொன்சேகா கேட்டது போல் நீங்களும் கேட்கக் கூடும்.

ஜெயசிக்குறு காலத்தை ஞாகப்படுத்திப் பார்த்தால், இதற்கான பதில் கிடைத்துவிடும்.

ஜெயசிக்குறு காலகட்டத்தில், வன்னியில் பல கள முனைகளை சிறிலங்காப் படைகள் திறந்திருந்தன. சிறிலங்கா இராணுவம் புளியங் குளம் வரைக்கும் வந்து குந்திக் கொண்டிருந்தது. ஒட்டுசுட்டானில் வந்து நின்று கொண்டு 'முல்லைத்தீவுக்கா அல்லது புதுக் குடியிருப்புக்கா செல்வது' என்று சிறி லங்காப் படைகள் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தன. கனகராயன் குளத்தை எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தன. கிளி நொச்சியில் பலமான தளம் அமைத்து நிலை கொண்டபடி, 'மாங்குளத்தை எப்படிக் கைப்பற் றுவது' என்று சிங்களப் படைகள் திட்டமிட்டுக் கொண்டிருந்தன. வன்னிக் கடற்பரப்பால் ஒரு தரையிறக்கத்தை மேற்கொண்டு புலி களின் தலைமையைக் குறிவைக்கவும் திட்ட மிட்டிருந்தன. வானில் இருந்து குண்டுகளைக் கொட்டியும், வன்னியின் பல முனைகளிலும் வான் தரையிறக்கத்தைச் செய்யும் முனைப்புக் களிலும் சிறிலங்காப் படைகள் ஈடுபட்டி ருந்தன.

இப்படி சிங்களப் படைகளால் விரிக்கப் பட்டிருந்த களமுனைகள் அனைத்திலுமே புலிகளின் அணிகள் அன்று தற்காப்புச் சமர்களைத்தான் நடாத்திக்கொண்டிருந்தன.

அத்தனை களமுனைகளுமே மிகவும் முக்கியமான கள முனைகள். ஒரு சிறிய கவலையீனமோ அல்லது பின்னடைவோ கூட பாரிய வெற்றியை எதிரிக்குப் பெற்றுக் கொடுத்துவிடும் என்ற இக்கட்டில் விடுதலைப் புலிகளின் அணிகள் நின்றுகொண்டிருந்தன.

ஆனால் இத்தனை தற்காப்பு சமர்களுக்கு மத்தியிலும், விடுதலைப் புலிகளின் அணிகள் கிளிநொச்சி மீது தாக்குதல் நடாத்தி, அதனை வெற்றிகொண்ட வரலாறு என்றும் ஒன்றிருக்கிற தை நாம் மறந்துவிடக்கூடாது.

ஆகவே, தற்காப்புச் சமர்களுக்கு மத்தி யிலும், அணிகளைத் திரட்டிப், பயிற்சி வழங்கி, ஒரு முற்றுகைச்சமரை வெற்றிகரமாக நடாத்தக் கூடிய ஒரு தலைவரைத்தான் விடுதலைப் புலிகள் அமைப்பு கொண்டிருக்கின்றது.

எனவே யாழ் குடா மீது ஒரு வெற்றிகரமான மீட்புத்தாக்குதலை நடாத்தும் தற்துணிவுடனும், ஆளணி வழங்கல்களுடனும், திறமையான தலைமைத்துவத்துடனும்தான் தற்பொழுதும் விடுதலைப் புலிகள் இருக்கின்றார்கள் என்பது, யாருமே மறுக்க முடியாத ஒரு உண்மை.


**Residential Mortgages**

**&**

**Commercial Loans**

**for Business**

Contact:

**Sri**

297 High Street North, Manor Park, London E12 6SL

Tel: **020 8475 0755**

Fax: **020 8470 4755** / Mob: **07803 600 543**




# R.S. Finance

**Mortgages**

**Re-Mortgages**
**(Raising Funds to Start Own Business and Other Needs)**
**Secured Loans**



Loans will be arranged for lease hold and free hold businessess

Arrangements are made to meet the senior business manager from leading banks in our premises to fulfil your business loan requirements.

**Commercial Loans**

**Shops**
**Petrol Stations**
**Restaurants**
**Care Homes Etc.**

**Whatever your needs, Regarding Your Mortgages or Commercial Loans**